8th April 1958]

Sri P. G. MANICKAM: இந்த திட்டங்கள் எல்லாம் நடைமுறை வருஷத்திலேயே நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri V. RAMIAH : இப்பொழுது நிறைவேற்றப்பட்டு இருக்கும் திட்டங்களையும், நிறைவேற்றுவதற்கு தாயராக இருக்கும் திட்டங்களையும் சொன்னேன்.

Sri G. G. GURUMURTHI : சாங்கிஷன் ஆன திட்டங்களில் மேட்டுப் பாளையமும் சேர்த்துக் கொள்ளப்படுமா?

The Hon. Sri V. RAMIAH : மேட்டுப்பாளையம், ஸ்கீம் சாங்ஷன் செய்யும் கட்டத்தில் இருக்கிறது என்று நான் சொல்லியிருக்கிறேன்.

* 638 *Q.*—Sri P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have any proposal to exempt the agriculturists who have signed an agreement for electric installation but have not been able to utilize electricity for irrigation purposes due to searcity of water, from the payment of electric charges?

The Hon. Sri V. RAMIAH : Under the present rules, sufficient concessions already exist for the grant of exemption from the payment of electric charges for proved scarcity of water for pumping. The need for issue of any new order in this regard does not therefore arise.

Sri S. M. ANNAMALAI : 1957-58 வருஷம் சுமார் **14,000** சர்வீஸ் கனெக்ஷன்கள் கொடுத்திருந்தபோதிலும், மோட்டார் கிடைக்காத காரணத்தினால் சர்வீஸ் வாங்கிக் கொள்ள முடிவதில்லை. அப்படிப்பட்ட சர்வீஸ்களுக்கு கட்டணம் வசூல் செய்யாமல் இருப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

The Hon. Sri V. RAMIAH : குறிப்பிட்ட காலத்திற்குள் மோட்டார் வாங்குவதில் உண்மையிலேயே சிரமம் இருக்குமானால், அவைகளை பரிசீலனை செய்து, உதவி செய்யப்படும்.

* 639 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there has been any cut in the supply of electric power recently in the Tiruchirappalli district;

(*b*) whether such power cut applies to industrial consumers; and

(*c*) the step taken by the Government to give a constant and regular supply?

The Hon. Sri V. RAMIAH : (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) Cuts in the supply of power have to be imposed whenever the water position in the hydel reservoirs deteriorates resulting in a reduction in the power-supply available for distribution. It is expected that the generation in our power systems will more or less catch up with the demand when all the power schemes included in the Second Five-Year Plan are completed and commissioned in a few years' time. It may then be expected that constant and regular supplies will be available.

[8th April 1958

SRI S. LAZAR : சார், சமீபத்தில் 25 சதவிகிதம், 50 சதவிகிதம் என்று 'கட்' போடப்பட்டிருக்கிறது. நிரந்தரமான ஒரு நிலைமை இன்னும் குறைந்த பட்சம் எவ்வளவு நாட்களில் ஏற்படும்.

THE HON. SRI V. RAMIAH : நிரந்தரமான நிலைமை இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவுக்குள் ஏற்பட்டு விடும். இன்னும் சில மாதங்களில் இப்போது இருக்கக்கூடிய கஷ்டம் போய்விடும் என்பதுதான் என்னுடைய நம்பிக்கை.

* 640 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the basis on which power-cut has been imposed this year; and

(*b*) how long the cut will be continued?

THE HON. SRI M. A. MANICKAVELU (on behalf of the Hon. Sri V. Ramiah) : (*a*) The power-cut imposed is based on the demand for power in the Hydro-areas in relation to the quantum of power generated in the Hydro-electric power stations in the State, which in turn is dependent on the water storages available in the Hydel Reservoirs.

(*b*) Till about the end of June 1958, when with the onset of the South-west monsoon, the storages in the Hydel Reservoirs in the State, may normally be expected to be augmented.

SRI A. VEDARATHNAM : நதி உற்பத்தி ஸ்தானங்களில் இந்த வருஷம் அதிக மழை பெய்திருந்தும், 'பவர் கட்' ஏன் வரவேண்டும் ? பவர் உற்பத்தியை அதிகரிக்காமல் வினியோகத்தை அதிகரித்துக் கொண்டு போவதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMIAH : மின்சார திட்ட பகுதிகளில் உள்ள அத்தனை தேக்கங்களிலும் போதுமான மழை இல்லை. முக்கியமாக பைகாரா பகுதியில் அதிக மழை இல்லாத காரணத்தினால் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. மின்சார வினியோகத்தை அதிகப்படுத்திக் கொண்டு போவதினால் அதிகமான பாதகம் ஏற்படாது என்பது நம்முடைய நம்பிக்கை. திட்டங்கள் எல்லாம் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. ஆகையால் இந்த நெருக்கடி தீர்ந்து விடும்.

SRI K. VINAYAKAM : Sir, when we are not in a position to maintain the existing services by giving cent per cent of their energy wanted in the concerns, what useful and utilitarian purpose will be served by electrifying more villages which will be also subsequently starved due to these cuts?

THE HON. SRI V. RAMIAH : Sir, my hon. collegue remarked that villages are starved. The villages are not starved. Neither are those who consume electricity are starved. We are going with an expansion scheme—both on the expansion of the available electricity and on the generation of electric power. We expected our Periyar scheme to come in time, to meet the expanded development of power. But due to some defects, it was held up for a few months. But, if there is any strain, it is due to that and that will be over in course of time.